# ஆண்டின் ஐந்தாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# 2022-02-06

(*இன்றைய வாசகங்கள்:*

*எசாயா நூலிலிருந்து வாசகம்* 6:1-8,

*திருப்பாடல்கள்* 138:1-5,7-8,

*கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்திலிருந்து வாசகம்* 15:1-11,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 5:1-11)

***திருப்பலி முன்னுரை***

*இறைமகன் இயேசுவில் பிரியமானவர்களே! ஆண்டின் ஐந்தாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு அன்புடன் அழைக்கப்படுள்ளோம். ஆம்! இன்றைய வாசகங்கள் இறைவன் நம்மை அழைக்கின்றார் என்ற செய்திகளை நமக்கு எடுத்துரைக்கின்றன. நாம் எத்தகையராக இருந்தாலும் நம்மை புடமிட்டு தூய்மைப்படுத்தி இறைவார்த்தைகளை அறிவிக்க பயன்படுத்துவார். அவரின் அழைப்பை ஏற்று நம்மை அவருக்கு முழுவதுமாக அர்ப்பணிக்கும்போது நாம் அவரில் வளர்கிறோம்.*

*இன்று அழைக்கப்பட்டவர்கள் மூவரும் சாதாரணமானவர்ளே! இந்த மூவரும் அழைக்கப்பட்டபோது தன் இயலாமையை உணர்ந்திருந்தார். அந்த இயலாமையில் இறைஆற்றலைக் கண்டுணர்ந்தார்கள். மீனவரானப் பேதுரு திருச்சபையின் தலைவராக நியமனம் பெறுகிறார். ஏசாயா அருகதையற்ற நான் எப்படி அருள்வாக்கை உரைக்க முடியும் என்ற அஞ்சியபோது இறைவன் அவரது உதடுகளைத் தூய்மைப்படுத்தி "நான் என்றும் உன்னோடு" என்று அனுப்பிவைக்கிறார். தடுத்து ஆட்கொள்ளப்பட்ட பவுலடியார் புறவினத்தாரின் திருத்தூதராக மாறுகிறார். இப்படி நம்மையும் தன் பணிக்காக அழைக்கும் இறைவனின் குரலுக்கு இதோ உமது அடிமை நானிருக்கிறேன் என்று உறுதியளித்து நமது இயலாமையை இறைவனின் ஆற்றலாக மாற்ற இறையருளை வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாடத்தில் மன்றாடுவோம். வாரீர்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***துணிந்து செல். நான் உன்னோடு இருக்கிறேன் என்றுரைத்த எம் இறைவா!***

*திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரை அனைவரும் உமது அழைப்பை ஏற்று துணிவுடன் இவ்வுலக மக்கள் அனைவருக்கும் உமது அருள்வாக்கை எடுத்துரைக்கவும், வாழ்ந்து காட்டிடவும் வேண்டிய வரங்களை வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நலமளிக்கும் இறைவா!***

*புதிய தொற்று நோயின் தாக்கத்திலிருந்து உம் மக்களை காப்பாற்றும். குழப்பமான இந்நேரத்தில் மருத்துவருகளுக்கு ஞானத்தை கொடுத்து அவர்கள் மக்களுக்கு சரியான சிகிச்சை அளிக்கவும், மருந்துகளினால் ஏற்படும் பக்கவிளைவுகளிலிருந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நாங்கள் பேச வேண்டியவற்றை குறிப்பிட்ட நேரத்தில் எங்களுக்கு கற்றுத்தரும் இறைவா!***

*எங்கள் குடும்பங்களில் உள்ளவர்கள் எசாயாவைப்போல் உமது அழைப்பை ஏற்று எங்கள் அருகில் உள்ள ஏழைகள்,அநாதைகள், கைவிடப்பட்டோருக்கு எங்களால் இயன்ற உதவி செய்து உமது அன்பைப் பகிர்ந்து வாழவேண்டிய வரங்களை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***இரக்கத்தின் ஊற்றான இயேசுவே,***

*உம்மைப் போற்றுகிறோம். எங்களுடைய சொந்த விருப்பத்தினாலோ, பாடுபட்டு உழைப்பதாலோ நாங்கள் எதையும் சாதித்துவிடப் போவதில்லை. உமது இரக்கத்தால் மட்டுமே எங்கள் உழைப்புக்குக் கனிகள் கிடைக்கும் என்று அறிகிறோம். ஆண்டவரே, எங்கள் உழைப்பை ஆசிர்வதியும். உமது இரக்கத்தால் எங்கள் பணிகளில் எங்களுக்கு வெற்றி அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***ஒளியான எம் இறைவா!***

*இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்வில் உம்மை அறியாமல் வாழ்ந்தக் காலங்களில் தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப, இவ்வுலகச் சிற்றின்பங்களைப் பெரிதாகக் கருதி அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை இழந்த நிலையில் தங்களைத் தேற்றுவதற்கு யாரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நீர் உமது உடனிருப்பை நிறைவாகப் பொழிந்து உமது ஆவியின் அருளை நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நாங்கள் வேண்டுவதற்கும், விரும்புவதற்கும் மேலாகவே எங்களை ஆசிர்வதிக்கும் அன்பு தெய்வமே, உம்மைப் போற்றுகிறோம்.***

*எங்களது சோர்வு வேளைகளில் நாங்கள் தளர்ந்து விடாமல், உமது சொற்களை நம்பி, தொடர் முயற்சிகளில் ஈடுபட எங்களுக்கு ஆற்றறல் தந்தருள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!***

*எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும், மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***கீழ்ப்படிதலின் மகிமையை உம் திருக்குடும்பத்தின் வழியாக உணர்த்திய எம் இறைவா!***

*எங்கள் குடும்பங்களில் இறைமகன் வாழ்ந்துக் காட்டிய அதே வழியை, நாங்களும் கடைபிடித்து, எங்கள் குடும்பங்கள் கோவிலாய் ஒளிர்ந்திட, எமக்கு சுயநலமற்ற அன்பும், அடுத்திருப்பவருடன் நட்பு பாராட்டும் நல்ல உள்ளங்களையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*